**Deposition of Witness**
**In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti.**

**Case No : CC 430 /2015**

**`prosecution witness**

**PW - 16** **10/04/2023**

| | |
|---|---|
| **Name** | மருத்துவர் . பிரவீன் |
| **Father's Name** | **நடராஜன்** |
| **Village** | தியாகராஜ நகர், பாளையங்கோட்டை |
| **Taluk** | பாளையங்கோட்டை |
| **Caste** | -- |
| **Calling** | **சீனியர் உறைவிட மருத்துவர்** |
| **Religion** | **இந்து** |
| **Age** | 42 |

(Accused present. )

**முதல் விசாரணை**

நான் **தற்போது** திருநெல்வேலி அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சீனியர் உறைவிட மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26-05-2015 அன்று நுண்கதிர் பிரிவில் நான் பணியில் இருந்த போது நுண்கதிர் வீச்சாளரால் எடுக்கப்பட்ட படங்களுக்கு நான் அளித்த அறிக்கை 5 வருடங்களுக்கு மேற்கண்ட ஆவணம் என்பதால் அதனை எங்கள் மருத்துவ கல்லூரி சட்டம் சார்ந்த அரசாணை மற்றும் சுற்றறிக்கையின் அடிப்படையில் மருத்துவம் சார்ந்த வழக்குகளின் நுண்கதிர் படங்களை 5 வருடங்களுக்கு மேல் பராமரிக்க தேவையில்லை என்றும் ் அதனை அழிப்பதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டதன் நகலை சமூகம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். அதன்படி இந்த வழக்கில் காயம்பட்ட நபர்களின் நுண்கதிர் படங்கள் மேற்படி அரசாணை மற்றும் சுற்றறிக்கையின்படி அழிக்கப்பட்டுவிட்ட படியால் சமூகம்

நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கமுடியவில்லை.

2. இந்த வழக்கில் காயம்பட்ட லூர்து பிரான்சிஸ் என்பவசரின் எக்ஸ்ரே ஜெராக்ஸ் காப்பி மட்டும் பார்வையிட்டு மண்டை ஒடு பகுதியில் இடது parietal Bone எலும்பு முறிவு காணப்பட்டது. நெஞ்சு பகுதி மற்றும் வயிற்று பகுதியில் எடுக்கப்பட்ட நுண்கதிர் படங்களில் எலும்பு முறிவு எதுவும் காணப்படவில்லை. **அந்த லூர் து பிரான்சிஸ் என்பவருக்கு எடுக்கப்பட்ட நுண்கதிர் பட அறிக்கை உண்மைநகல் அ.சா.ஆ–6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

**1.** 26–05–2015 ம் தேதி காயம்பட்ட நபர்களுக்கு எடுத்தாக சொல்லியுள்ளேன் ஆனால் எப்போது எடுக்கப்பட்டது என்பது குறித்து நான் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. 24–08–2015 ம் தேதி அன்று என்னை வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளர் விசாரித்தார் என்றால் எனக்கு தேதி ஞாபகம் இல்லை.

3. சட்டம் சார்ந்த நுண்கதிர் படங்களை 5 வருடங்களுக்குள் அழிக்கவேண்டும் என்ற சுற்றறிக்கையின் விபரம் எனக்கு அப்போதே தெரியும். அவ்வாறு தெரிந்திருந்தும் மேற்கண்ட நுண்கதிர் படங்களை ஆய்வாளர் என்னை விசாரித்தபோது ஒப்படைக்காததற்கு சிறப்பு காரணம் எதுவும் இல்லை. பொதுவாக நுண்கதிர் படங்களை ஆய்வாளரிடம் ஒப்படைப்பது வழக்கம் இல்லை. நுண்கதிர் பட அசல் ஒப்படைக்கவில்லை என்றால் நீதிமன்றத்தில் மட்டும் ஒப்படைப்பது வழக்கம்.

4. அவ்வாறு நுண்கதிர் படங்களை ஒப்படைத்தால் காயம்பட்ட நபருக்கு சாதாரண காயம் ஏற்பட்ட விபரம் தெரிந்துவிடும் என்பதால்தான் ஆய்வாளர் விசாரணையின்போது நுண்கதிர் படத்தையோ அது தொடர்புடைய அறிக்கையோ சமர்ப்பிக்கவில்லை என்றால் சரியல்ல.

5. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது.)**

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு

தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்),B.பீட்டர்,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.